**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி.**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,LLM.,B.Sc.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சிங்கம்புணரி

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ம் நாள் திங்கள்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு எண்:64/2026**

முகமது சரிபு (55/25)
த/பெ.நாகூர்,
339, தேத்தாங்காடு,
சிங்கம்புணரி
சிங்கம்புணரி தாலுகா,
சிவகங்கை மாவட்டம். -- மனுதாரர்

/ எதிர் /

1. நாகூர் அம்மாள்,
க/பெ. முகமது சரிபு,
339, தேத்தங்காடு,
சிங்கம்புணரி,
சிங்கம்புணரி வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

2. ஆசிக்,
த/பெ.முகமது சரிபு
339, தேத்தங்காடு,
சிங்கம்புணரி,
சிங்கம்புணரி வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

3. அஜிளா பானு,
த/பெ.முகமது சரிபு
339, தேத்தங்காடு,
சிங்கம்புணரி,
சிங்கம்புணரி வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

4. மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்,
சிவகங்கை.

5. காவல் ஆய்வாளர்,
சிங்கம்புணரி காவல் நிலையம். -- எதிர்மனுதாரர்கள்

மனுவானது 173 B.N.S.S பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

**1. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:**

**1**(1) மனுதாரர் தரப்பில், மனுதாரர் மனைவி நாகூர் அம்மாள் பெயரில் 12 செண்ட் நிலத்தில் தார்சு வீடு கட்டிள்ளதில் மனுதார் மனைவி, பிள்ளைகளான 1 முதல் 3 எதிர்மனுதார்கள் வசித்து வருகிறார்கள். மனுதார் பெயரில் உள்ள 4 செண்ட் நிலத்தில் இரண்டு ஓட்டு வீடு உள்ளதில் ஒரு வீட்டில் மனுதார் மட்டும் தனியாக வசித்து வருகிறார் என்றும் மற்றொரு ஓட்டு வீடு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி வாடகையை வைத்து தான் மனுதார் பிழைத்து வருகிறார். மனுதாரர் தனது மனைவி பிள்ளைகளை விட்டு 3 ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருகிறார். கடந்த இரண்டு மாதங்களாக ஓட்டு வீட்டு வாடகையை 1 முதல் 3 எதிர்மனுதார்கள் வாங்கி வந்ததை 18.08.2025 ம் தேதி மதியம் சுமார் 12.50 மணிக்கு மேற்படி எதிர்மனுதார்களிடம் என் பெயரில் உள்ள வாடகையை நீங்கள் ஏன் வாங்குகிறீர்கள் என கேட்டதற்கு அப்படிதாண்டா வாங்குவோம் என்றும் உன் பெயரில் உள்ள 4 செண்ட் நிலம் மற்றும் ஓட்டு வீட்டை எங்கள் பெயரில் எழுதி கொடுடா நீ சம்பாதித்து எங்களுக்கு கொடுக்க வேண்டியது தான் உன் வேலை என்று சொல்லும் போதே மனுதார் மகள் இவனை அடித்து கொல்லுங்கள் என்று சொல்லவும், மனுதார் மகன் மனுதாரர் கைகளை பிடித்து கொள்ளவும் மனைவி விளக்கமாறு வைத்து உடம்பில் அடித்தார். மனுதார் மகள் செருப்பால் தலை, முதுகில் அடித்து துணியை எடுத்து வாயில் திணித்து சத்தம் கேட்காமல் இருக்கட்டும் என்று சொன்னார். மனுதார் மகன் இரும்பு கம்பியால் இடது முழங்காலில் கீழே அடித்து ரத்தகாயத்தை ஏற்படுத்தி இத்தோடு செத்து போடா என்று சொல்லி இடது கையில் அடித்து ரத்தகாயம் ஏற்படுத்தியும் வலது கையில் கம்பியை வைத்து குத்தி ரத்தகாயம் ஏற்படுத்தினார்.

1(2) சம்பவத்தை பார்த்த அப்துல் அஜிஸ், ஆசிக் அலி ஆகியோர்கள் மனுதாரரை வெளியில் விடாமல் இரண்டு நாட்களாக வீட்டிற்குள்ளே அடைத்து உணவு கூட வழங்காமல் கொடுமைபடுத்தினார்கள். 21.08.2025 ம் தேதி மனுதாரர் செல்போனை தேடி எடுத்து சிங்கம்புணரி கீழக்காட்டு ரோட்டில் வசித்து வரும் முதல் மகன் யாசினுக்கு போன் செய்து நடந்த கொலை முயற்சியை சொல்லிய பிறகு மனுதாரரை அழைத்து வரும் போது அப்துல் அஜீஸ், ஆசிக் அலி ஆகியோர்கள் உங்கள் தந்தையை அடிக்கும் போது நாங்கள் நேரில் பார்த்ததால் உங்கள் தங்கை வீட்டின் அறைக்குள் அழைத்து சென்று விட்டார். பின்னர் மனுதாரரை யாசின் 21.08.2025 ம் தேதி சக்தி கிளின்க்கில்

சிகிச்சைக்கு அழைத்து சென்று சிங்கம்புணரி காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார். மனுதார் அன்று முதல் சிகிச்சை பெற்று வருகிறார். பின்னர் அதே புகாரை சிங்கம்புணரி காவல்துறை ஆய்வாளருக்கும், சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கும் பதிவு தபால் அனுப்பி வைத்ததை இன்று வரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே 1 முதல் 3 எதிரிகளின் மேல் பாநீச பிரிவுகள் 296, 118(1), 118(2), 126, 127, 351(3)ன் படி வழக்கு பதிவு செய்ய உத்தரவாக வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் ஆவணங்களை பரிசீலினை செய்து பார்த்ததில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் மருத்துவ அறிக்கையை பரிசீலிக்கையில் 21.08.2025ம் தேதி மருத்துவ சிகிச்சைக்கு சேர்ந்ததாக காணப்படுகிறது. எனவே மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ளவாறு 1 முதல் 3 எதிர்மனுதார்களால் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்துக் கொண்டுள்ளது தெரிய வருகிறது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ள சங்கதிகள் சிங்கம்புணரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும், சிவகங்கை மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு பதிவு தபால் மூலம் புகார் அனுப்பியும் மேற்படி புகார்மனுவை பெற்றுக் கொண்டு இதுநாள் வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது முதல் தோற்றமாக அறிய முடிகிறது.

3. மேலும் எதிர்மனுதாரர் காவல்நிலையத்திற்கு மேற்படி மனுதார் கொடுத்த மனுவிற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய கோரியதற்கு மனுதாரர் காவல்நிலையம் வந்தால் விசாரித்து வழக்கின் தன்மைக்கேற்ப வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, காவல் ஆய்வாளர், சிங்கம்புணரி காவல் நிலையம் இவ்வழக்கு சம்பந்தமாக உத்தரவு கிடைத்த நாள் முதல் ஒரு மாத காலத்திற்குள் மேற்படி புகாரினை விசாரித்தும், ஆவணங்களை பரிசீலித்தும், தேவையெனில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கும்படியும், மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை நீதிமன்றத்திற்கு தெரிவிக்கும்படியும் உத்தரவிடப்படுகிறது. சிங்கம்புணரி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களுக்கு புகார்தாரரின் புகார் மற்றும் ஆவணங்களை இந்த உத்தரவுடன் இணைத்து அனுப்ப உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ம் நாள் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

/ உண்மை நகல்/

(ஒம்/–ஜி.அபர்ணா)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.

**நகல்**

காவல் ஆய்வாளர்
சிங்கம்புணரி காவல் நிலையம்